මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

ஊடக அறிவித்தல் இல: PRE/2024/07 2024.07.31

# சனாதிபதித் தேர்தல் - 2024 செப்டம்பர் 21

## அஞ்சல் வாக்கு விண்ணப்பித்தல்

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலுக்கான அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் காலம், 2024.08.05 ஆம் திகதியுடன் முடிவடையும்.

அஞ்சல் வாக்கு விண்ணப்பதாரிகளுக்கு அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைப் பூரணப்படுத்துவதற்கான தேருநர் இடாப்புப் பதிவுத் தகவல்கள் தேர்தல் ஆணைக்குழுவின் www.elections.gov.lk என்ற இணையதளத்தில் தேர்தல் நடவடிக்கைகளுக்கான தேருநர் பதிவு விபரம் - ஜனாதிபதித் தேர்தல் - 2024 (2024 ஒருங்கிணைந்த தேருநர் இடாப்பு) என்ற இடையிணைப்பியினுள் பிரவேசித்து தமது தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளிடுவதன் மூலம் பெற்றுக் கொள்ள ஏற்ற வசதி செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்களின் வேறு தேவைகளை நிறைவேற்றுவதற்காக தேர்தல் ஆணைக்குழுவினால் 2024.07.01 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2024 தேருநர் இடாப்பும் உத்தியோகபூர்வ இணையதளத்தில் தரவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அரச மற்றும் மாகாண அரச சேவை தொழிற்சங்கக் கூட்டின் ஏற்பாட்டாளர் தேர்தல் ஆணைக்குழுவின் இணையதளத்தில் குறிப்பிடப்படும் 2024.07.31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இடாப்புத் தகவல்களின்படி அஞ்சல் வாக்கு விண்ணப்பிப்பதை தவிர்ந்துகொள்ளுமாறு செய்த அறிவிப்பும், 2024.08.15 அம் திகதி வரை அஞ்சல் வாக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமென முகநூல் பக்கத்தில் பிரச்சாரம் செய்த அறிவிப்பும் சம்பந்தமாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு எவ்விதத்திலும் சம்பந்தமில்லை என்பதுடன், அதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதும் மக்களை தப்பாக வழிநடாத்தக்கூடியதுமான பிரச்சாரம் என்பதை அறிவிக்கின்றேன்.

தேர்தல் தொடர்பான நியதிச்சட்ட கருமங்கள் சம்பந்தமாக தேர்தல் ஆணைக்குழுவினால் சுற்றறிக்கைகள்/ அறிவுறுத்தல் கடிதங்கள் மூலம் அரச மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்களுக்கும் மக்களுக்கும் வழங்கப்படும் ஆலோசனைகளுக்கும் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் வெளியிடப்படும் அறிவித்தல்களுக்கும் புறம்பாக வேறு தரப்பினர்களினால் மேற்கொள்ளப்படும் பிரச்சாரங்கள் சம்பந்தமாக தேர்தல் ஆணைக்குழு பொறுப்பேற்க மாட்டாது என்பதும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ஆகையால், பொய்யான பிரச்சாரங்களை நம்பி விடாமல் தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் தமது பதிவுக்குரிய தகவல்களின்படி அஞ்சல் வாக்கு விண்ணப்பமொன்றைப் பூரணப்படுத்தி தமது நிறுவனத்தின் அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தர் ஊடாக 2024.08.05 ஆம் திகதிக்கு முன்னர் தேருநர் இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டத்தின் மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு அனைத்து அஞ்சல் வாக்காளர்களையும் தேர்தல் ஆணைக்குழு வேண்டிக் கொள்கின்றது.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்